04.03.2025

O.S.No. 357/2019

**வா.சா.1 : ராஜமாணிக்கம்**

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு தொடர்ச்சி விசாரணை:–</u>**

7) நான் ஆத்தூர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரில் 05.10.2012 ம் தேதி பிரதிவாதி என்னுடைய வீட்டிற்கு வந்ததாகவும், என்னிடம் ரூ. 4,50,000/– யை வாங்கிகொண்டு அதற்கு ஆதற்கவாக கடையை சுவாதீனம் கொடுப்பதாக ஒப்புக்கொண்டார் என்று புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். வழக்கு காசோலை திருப்பப்பட்ட பிறகு பிரதிவாதிக்கு சொந்தமான கடையை சுவாதீனம் ஒப்படைப்பதாக வழக்கு உரையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

8) வா.சா.ஆ.2 அறிவிப்பில், அறிவிப்பு கிடைத்த 7 நாட்களுக்குள் பணத்தை திருப்பி கொடுக்கவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த அறிவிப்பே மாற்று முறை ஆவண சட்டப்படி தவறு என்றும், அந்த அறிவிப்பே செல்லதக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பிலோ, என்னுடைய வழக்கு பிராதிலும் சாட்சி அமுதன் முன்னிலையில் வைத்து பணம் கொடுத்தாக சொல்லவில்லை, பிரமாண பத்திரத்தில் தான் முதன் முதலாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

9) நான் 3 தலைமுறையாக வெங்காயம் வியாபாரம் செய்து வருகிறோம். எனக்கு நிரந்த கணக்கு எண் உள்ளது. என்னுடைய நிரந்த கணக்கு எண்ணில் நகலை நீதிமன்றத்தில் தேவைப்படும் போது சமர்ப்பிக்க தயாராக உள்ளேன். வா.சா.ஆ.2 அறிவிப்பில் நான் கொடுத்தாக சொல்லும்

தொகைக்கு வட்டி எதுவும் கேட்டகவில்லை என்றால் வழக்குரையில் கேட்டுள்ளேன்.

10) பிரதிவாதி எனக்கு அனுப்பிய வா.சா.ஆ.6 அறிவிப்பில் நான் பதில் எதுவும் கொடுக்கவில்லை என்றால் கொடுக்கவில்லை. வழக்கு போட்டுள்ளேன். இந்த வழக்கில் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள பதிலுரைக்கு நான் மறுப்புரை தாக்கல் செய்யவில்லை. பிரதிவாதி அனுப்பிய அறிவிப்பையும், பதிலுரையை நான் ஒப்புக்கொண்டதால் தான் நான் மறுப்பு உரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

11) என்னுடைய நிருபண வாக்குமூலத்தில் பத்தி எண். 3,4,5 ஆகியவற்றில் வழக்குரையில் சொல்லப்படதா விவரங்களை சொல்லியுள்ளதால் அவைகள் ஏற்றுக்கொள்ளதக்கது அல்ல என்றால் சரியல்ல. என்னுடைய அறிவிப்பில் முதல் பத்தியில் பிரதிவாதி அவருடைய கடனை தீர்ப்பதாக சொல்லி தான் என்னிடம் கடன் வாங்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

12) என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் பிரதிவாதி அவருடைய கடையை விரிவாக்கம் செய்தவதற்காக தான் கடன் வாங்கியுள்ளார் என்றால் விரிவாக்கம் செய்தவதற்காகவும் என்று சொல்லி தான் வாங்கியுள்ளார். 12 சதவீதம் வட்டி தருவதாக பிரதிவாதி ஒப்புக்கொள்ளதாத நிலையில் நான் கோரியுள்ள வட்டி வீதம் தவறானது என்றால் சரியல்ல. என்னிடம் இருந்து 391 சதுர அடி நிலம் கிரைய் வாங்கிய நிலையில் அதில் 356 சதுர அடிக்கு மட்டுமே ஆத்தூர் நகராட்சி மற்றும் வருவாய் துறையால் அனுமதி மற்றும் பட்டா வழங்கப்பட்ட நிலையில் மீதி 35 சதுர

அடிக்காக நான் பிரதிவாதியிடம் கேட்டு வாங்கியது இந்த காசோலை என்றால் அதற்கும் இதற்கும் எவ்வித சம்பந்தம் இல்லை. நான் கடைசி வரை 35 சதுர அடிக்கு எவ்வித பட்டாவோ அனுமதியோ வாங்கி தரவில்லை என்பதால் வா.சா.ஆ.6 கொடுத்தார் என்றால் சரியல்ல.

13) பிரதிவாதியிடம் பெற்ற இரண்டு வெற்று காசோலைகளில் ஒன்றை பூர்த்தி செய்து துர்லாபம் அடையவேண்டும் என்ற எண்ணத்தில் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 வழக்கு காசோலையில் உள்ள கையெழுத்தும், மற்ற வாசகங்களும் வெவ்வேறு கால கட்டத்தில் நிரப்பப்பட்டவை என்றால் சரியல்ல. அவர்தான் பூர்த்தி செய்து கொடுத்தார்.

14) உண்மையாவே நான் பிரதிவாதிக்கு ரூ. 4,50,000/- கொடுத்து இருந்தால் வேறு பிணை ஆவணம் ஒன்றை எழுதி வாங்கியிருப்பேன் என்றும் அவ்வாறு இல்லாததால் நான் சொல்வது போல வா.சா.ஆ.1 காசோலைக்கு எவ்வித பணம் நான் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 05.12.2012ம் தேதி இந்த வழக்கு காசோலைக்கு எவ்வித பிரதி பிரயோஜனமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

15) என்னுடைய அறிவிப்பு, வழக்கு பிராது, வாக்குமூலம் ஆகியவற்றில் நான் எந்த வகையான கடன் கொடுத்தேன் என்று குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. நான் கொடுத்த அறிவிப்பு தவறு என்றும், சட்டப்படி அனுப்படவில்லை என்பதால் இந்த காசோலை கடனும் சட்டப்படி வசூலிக்கப்பட முடியாது என்றால் சரியல்ல. இந்த வழக்கு சட்டப்படி தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S
Digitally signed by GANESAN S
Date: 2025.03.04 18:27:28 +0530

Subordinate Judge, Attur.